The respect to be shown to a Guru should be like the respect you show to God. The Guru is God Himself (i.e. the form of God). We also worship the elephant, cow, eagle, monkey, peacock and many other living beings which are in the form of God. Among human beings there are only few people who are Avatars (i.e. Guru). When you talk about paying respect to a Guru, Devotion, Involvement, Complete faith, not engaging in arguments, maintaining a distance (physically) while talking to a Guru, not talking about issues relating to other people, not talking loudly in the presence of a Guru, not claiming or advertising to others that you are His devotee, avoiding any critical comments about a Guru, seeing or visualizing the Guru in the form of the God which He worships – having and adhering to all of this can be considered as the greatest respect you can show to your Guru. Sincere devotion towards a Guru is required and should be observed. Showing respect to a Guru means definitely following His Upadesha and following the good path shown by Him. This is the Real Respect to be shown to a Guru.

குருவிடம் எப்படி மரியாதை செலுத்த வேண்டும்?

குருவிடம் மரியாதை செலுத்துவது இறைவனிடம் செலுத்தும் விதமாகயிருத்தல் வேண்டும். குரு என்பவர் இறைவனின் அம்ஸமே. இறைவனின் அம்ஸமாக யானை, பசு, கருடன், குரங்கு, மயில் இன்னும் பல ஜீவன்களையும் வணங்குகிறோம். மனிதர்களுள் சிலர் மட்டுமே குருவாக அவதரிக்கிறார்கள். மரியாதை செலுத்துவது என்பதை குறிப்பிடும் போது பக்தி, ச்ரத்தை, பூரண நம்பிக்கை, எதிர்வாதம் செய்யாதிருத்தல், சற்றே விலகியிருந்து பேசுதல், பிறரை பற்றிய விஷயங்களை பேசாதிருத்தல், சப்தம் போட்டு உரக்க பேசாதிருத்தல், தன்னை சீடன் என்று சொல்லாமல் இருத்தல், குருவை பற்றிய

விமர்சனங்களை தவிர்த்தல், சாக்ஷாத் குரு எந்த தெய்வத்தை உபாசனை செய்கிறாரோ அந்த தெய்வமாக பாவிப்பது போன்ற கட்டுப்பாடுகளை கடைபிடிப்பதே நாம் குருவுக்கு செய்யும் மகத்தான மரியாதையாகும். ஆத்மார்த்தமான பக்தியே குருவிடம் அவசியம் கடைபிடித்தல் வேண்டும். குருவிடம் மரியாதை செலுத்துவது என்பது அவர் காட்டும் நல்வழி, நல் உபதேசம், இவற்றை கடைபிடிப்பதே அவசியமாகும். இது தான் ப்ரத்யக்ஷ மரியாதை என்று சொல்லலாம்.

### 3. What is the difference between Guru and God, if there is any?

'Deivam Manushya Roopena' - God is in the form of Human. God taking the Avatar of Man, is Yuga Dharma. Guru is one who has wisdom, removes ignorance and gives clarity of mind. Staying in one place in the Garbhagraham (in temple), God showers His grace. Moving to many places, imparting good character and wisdom is the Ucchava Murthy, who is the Guru. God and Guru are one and the same. If illusion (Maya) is removed from us, both will appear to us, as one.

**பகவானுக்கும் குருவிற்கும் வித்தியாசங்கள் ஏதேனும் உண்டா?**

"'தெய்வம் மனுஷ்ய ருபேண" என்பதை போல் கடவுள் மனிதராக அவதரிப்பது யுக தர்மம். ஞானம் மட்டுமே இருப்பவர்தான் குரு. அறியாமையை போக்குபவர், மனதிற்கு தெளிவை கொடுப்பவர். கர்ப்பகிருஹத்தில் ஒரே இடத்தில் இருந்து கொண்டு அருள் பார்ப்பவர் கடவுள். பல இடங்களுக்கும் சென்று ஒழுக்கத்தையும், ஞானத்தையும் போதிப்பவர். உற்சவ மூர்த்தியை போல் குரு. பகவானும், குருவும் ஒன்றுதான். நம் அகக் கண்ணால் தான் காண முடியும். நமக்கு மாயை விளக்கினால் இரண்டும் ஒன்றாகவே தோன்றும்.

### 4. How do we maintain unflinching faith in God in the midst of such continued sufferings?

Only when you have full belief, you can accept any Vedanta. Whenever we face any difficulties in our life we have to constantly worship God. "Worshipping of GOD is the Greatest Dharma". We face joys and sorrows in our life, on account of our deeds performed in our previous janma. The unflinching faith in God during such times will

ease our miseries. If we realise that God is responsible for both joy and sorrow, we will never blame God when we are in sorrow.

We should keep chanting the Mantra 'Loka Samastha Sukhino Bavantu' which will protect all of us at all times.

**வாழ்க்கையில் துன்பங்கள் இருப்பினும் இவைகளுக்கிடையில் தெய்வத்திடம் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட என்ன செய்ய வேண்டும்?**

நாம் பூரண நம்பிக்கையுடன் இருந்தால் மட்டுமே நாம் எந்த வேதாந்தத்தையும் ஏற்றுக் கொள்ள முடியும்.

எந்த சிரமம் வந்தாலும் நாம் இடைவிடாது இறை வழிபாட்டை கடைபிடிப்பது தான் தர்மம். மேலும் நாமே தேடிக் கொள்ளும் சிரமம் அல்லது நம் ப்ராரப்தத்தினால் அனுபவிக்கக் கூடிய சிரமம் எதுவானாலும் நம்பிக்கையோடு கடவுளிடம் ப்ரார்தித்து கொண்டால் போதுமானது.

சிரமத்திற்கு காரணம் சந்தோஷத்திற்கு காரணம் இரண்டுக்குமே பகவான் தான் என்று நினைக்கும் யாரும் எந்த தீய செயலுக்கும் பகவானை நொந்து கொள்ள கூடாது. 'லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து' என்ற தாரக மந்திரமே நம்மை ரக்ஷிக்கும் கவசம்.

**5. What should we practice to always be associated with our Guru, even if we are physically far away from Him?**

If we want to be involved in Sathkarya with our Guru always and if we don't want to be worried as we are far away from our Guru, the good deeds we perform and the good virtues and qualities we develop would be considered as being close to or near our Guru and rendering service to Him. Further to be attached to a Guru and for listening to good things, specifically taking Mantra Upadesha is not required. Being polite, approaching people with the thought of helping them, rendering service in a temple, obtaining the darshan only of other Gurus is considered best. If we ensure that we conduct all our activities in our day to day life without failing in our duties, you would experience the feeling of being close or near to your Guru and serving Him. Further not talking ill of people (i.e. without discrimination) would only provide meaning to the good deeds we perform.

**குருவை விட்டு தொலைவில் இருந்தாலும் எப்போதும் குருவின் சத்கார்யத்தில் ஈடுபட என்ன செய்ய வேண்டும்?**

நம் குருவோடு எப்போதும் நாம் சத்கார்யத்தில் ஈடுபட வேண்டுமானால், வெகு தொலைவில் தள்ளி இருப்பதாக கவலைப்படாது இருக்க வேண்டுமானால். நாம் செய்யும் நல்ல காரியங்களும், நல்ல பண்புகளை வளர்த்து கொள்வதுமே, குரு அருகில் இருந்து செய்யும் சேவையாகும். மேலும் குருவை பற்றி கொள்ள, சத் விஷயத்தை கேட்க, நாம் குறிப்பாக மந்திர உபதேசம் எடுத்துக்கொள்வது தேவையற்றது. மற்றவர்களிடம் பரிவுடனும், மற்றவர்களிடம் பரோபகார சிந்தனையுடனும் அணுகுவது, ஆலயத்திருப்பணி (கைங்கர்யம்) செய்வது, மற்ற குருமார்களின் தரிசனம் மட்டும் செய்வது சிறப்பு. நாம் செய்யும் அன்றாட கார்யங்களில் கடமை தவறாது இருந்தால் குரு அருகிலேயே இருந்து சேவை செய்யும் பாக்கியத்தை உணர முடியும். மேலும் யாரை பற்றியும் த்வேஷமாய் பேசாதிருத்தல் மட்டும்தான் நாம் செய்யும் நல்ல கார்யத்திற்கு அர்த்தமாகும்.

**6.Why do some devotees face a lot of hardship though they are fully devoted to their Guru?**

Difficulty (or hardship) is not something which arises due to any difference between a devotee and Guru. Difficulty is something which is common to all. Experiencing this is based on the grace of God. Difficulty is applicable for all. It is not that only the devotee would have to face the difficulty. God would first give the difficulty and then give the happiness. This is similar to the ocean, where poison was initially obtained before nectar was obtained. At the time of difficulty one should never lose faith or confidence in God. Further difficulty is not given by anyone; especially it is not given by a Guru. A Guru is one, who would perform pooja and penance and would not give importance to the worldly life. A Guru would be one, who works for universal welfare only and adheres to Swadharma.

By performing one's duties, one can obtain the grace of God and Guru. In such situations, there would be no difficulty. Further God would grant all things to us in the appropriate time. When a devotee or Guru does not adhere to Dharma, all kinds of difficulties may have to be experienced. However when a devotee has total faith or confidence, that itself would help him overcome any kind of difficulty.

Hence a devotee is not tested or put to hardship because of a Guru, but because of the devotee himself. At times of difficulty it is enough if the devotee worships God or Guru.

**சில பக்தர்கள் மட்டும் (முழு பத்தி இருந்தாலும்) ஏன் நிறைய சோதனைகளை அனுபவிக்கிறார்கள்?**

சோதனை என்பது பக்தாள், குரு என்ற வித்தியாசத்தில் வருவதில்லை. எல்லோருக்கும் சோதனை பொது தான். அதை அனுபவிக்க கடவுள் அனுகிரஹம் தேவை. யாரும் சோதனைக்கு உட்படுபவர்களே. இதில் பக்தனுக்கு மட்டும் தான் சோதனை என்பது கிடையாது. பகவான் சோதனைகளை கொடுத்த பிறகுதான் ஆனந்தத்தை தருவார். பார்கடலில் முதலில் விஷமும் பின் அம்ருதமும் கிடைப்பது போல் சோதனையின் போது நாம் ஒருபோதும் தெய்வ நம்பிக்கையை விடக்கூடாது. மேலும் சோதனை யாரும் கொடுப்பதில்லை, குறிப்பாக குரு என்பவர் சோதனை செய்யாதவர்தான். சோதிக்ககூடியவர் கண்டிப்பாய் குருவாக இருக்கமுடியாது. மேலும் குரு என்பவர் தவம், பூஜை இதை தவிர வெளியுலக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க கூடாது. உலக நன்மையை மட்டுமே கருதி ஸ்வதர்மத்துடன் இருப்பவர் மட்டுமே குரு. அதைப் போல் தன்னுடைய கடமையை செய்தாலே திருவருளும், குருவருளும் கிடைக்கும். சோதனைக்கு இடமே இல்லை. மேலும் நமக்கு எந்த கார்யமும் காலமறிந்து தான் கடவுள் நடத்தி தருவார். குருவோ, பக்தனோ யாராயிருந்தாலும் தர்மத்தை மீறும்போது சோதனைகளை அனுபவிக்கும்படி ஆகிறது. இருப்பினும் பூரண நம்பிக்கை மட்டும் எந்த ஒரு சோதனையிலிருந்தும் பக்தனை காப்பாற்றும். ஆக பக்தன் குருவால் சோதிக்கப்படவில்லை. பக்தனால் பக்தனுக்கு சோதனை. பக்தர்களுக்கு சோதனை வரும்போது குருவையோ, கடவுளையோ த்யானித்தால் போதுமானது.

**7. What is our duty towards a Guru?**

Good things told by anyone should be accepted - whether it is from a small or big or bad or good person, all these are not a matter of concern for an Acharya. The opinion of this person (which is superior), is what is important. Accepting a Guru by listening to His advice and following that (or) like Ekalaivan accepting a Manasiga Guru and listening to His advice and pursuing the right path is the duty of a devotee. Even if a Guru appears as a small man, His position or status

is very big. Further talking to a Guru on worldly matters like talking ill about others or calling a Guru for resolving problems due to a family issue or telling Him that others are saying this or that, is considered as Adharma. When you listen to the Upadesha of a Guru and/or when you obtain the Darshan of a Guru, you should consider yourself to be fortunate. The greatest blessing is when you are able to quietly or silently salute a Guru. You cannot surrender to a Guru carrying the burden of your problems. One who surrenders with total devotion and faith is sure to obtain the grace of a Sathguru. Only one who strives for universal welfare and is unselfish can be a Guru. In life, a Guru's blessings and grace alone are sufficient. If a person has a Guru to guide him, then his maturity and love would be explicitly seen through his wisdom.

குருவிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?

நல்லதை யார் சொன்னாலும் ஏற்றுக்கனும், சிறியவன் பெரியவன் கெட்டவன் நல்லவன் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது தான் அவனிடத்தில் உள்ள மிக உயர்ந்ததான கருத்து மட்டுமே அவச்யம் குருவை ஏற்றுக்கொள்வதும் அவர் கூறும் நல்ல அறிவுரையை ஏற்று செயல்படுதலும் ஏகலைவனைப்போல் மானசீகமாக குருவை ஏற்றுக்கொண்டு அவர் உபதேசங்களை கடைபிடித்து நம்மை நல்வழிக்கு கொண்டு செல்வதே நமது கடவை குரு சிறியவராயினும் ஸ்தானம் மிகப்பெரிது. மேலும் குருவிடம் லொளகீகமான விஷயங்களான, மற்றவர்களைப்பற்றி தவறாக பேசுதல் குடும்ப பிரச்னையை கொண்டு பஞ்சாயத்துக் அழைததல் மற்றவர்கள் இதையும் அதையும் சொல்கிறார்கள் என்று பல லொளகீக விஷயங்கள் குருவிடம் தெரிவிப்பது அதர்மமே. குருவிடம் நல்லுபதேசங்களை கேட்பதும் தர்சிப்பதுமே பெரும் பாக்யம் என கருத வேண்டும் பெரும் பாக்யம் என்பது குருவிடம் மௌனித்து வணங்குதலேயாகும். பிரச்சனைகளை சுமந்து கொண்டு குருவை சரணடைய முடியாது. பக்தியும், நம்பிக்கையும் இருந்து எவன் சரணடைகிறானோ அவனே சத்குருவால் அனுக்ரஹிக்கப்படுவான். லோகஷேமத்திற்காக சுயமில்லாதவர் மட்டுமேதான் குருவாகவும் இருக்க முடியும். வாழ்வில் குரு அனுக்ரஹம் மட்டுமே நமக்கு போதுமானது. குரு வழிகாட்டி ஒரு மனிதனுக்கு இருந்து விட்டால் அவனுக்கு பக்குவமும், அன்பும் ஞானமாகவே வெளிப்படும்.

**8. What should be done when some non-believers hinder a believer's worship?**

We should never say that someone does not have faith in God. There are many people who have sincere faith in God in their own way. We believe in God and perform many activities. Further faith is something which is based on one’s own opinion. Devotion (Bhakthi) is also something which has to come on its own (in a natural manner). It is not Dharma to force anyone to gain Bhakthi. Further when we are pursuing Bhakthi Yoga, if people (who are not attached to God) disturb us, this is for God only and we should not consider this as a challenge for us. Many people face difficulties in life. As the saying ‘Deivam Manushya Roopena”, all people are the form of God. In Bhakthi Yoga, when we face difficulties, it should be considered as the difficulties given by God. We should completely surrender to the Goddess and all things would become favourable for us. Further during certain time periods, people who have belief in God, due to some difficulties in life, lose their faith. Even those who frequently visit the temple, stop going to the temple, when some of their prayers are not answered. There are some people like this also. Hence we should all have a single objective – completely surrendering to God with faith.

**பக்தி மார்கத்தில் இருக்கும் போது கடவுளின் மீது பற்றற்றவர்கள் நம்மை தொந்தரவு செய்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?**

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று யாரையும் கூறமுடியாது. பலரும் மானசீகமான நம்பிக்கையை கடவுளிடம் வைத்துள்ளார்கள். நாம் கடவுளை நம்பி பல கார்யங்கள் செய்கிறோம். மேலும் நம்பிக்கை என்பது அவரவர்களின் தனிப்பட்ட கருத்து. பக்தி என்பது கூட தானாக வர வேண்டும். கட்டாயப்படுத்துவது தர்மம் இல்லை. மேலும் பக்தி மார்க்கத்தில் இருக்கும் போது கடவுளின் மீது பற்றற்றவர்கள் நம்மை தொந்தரவு செய்தால் அது கடவுளுக்கு தான். நமக்கு தொந்தரவு கொடுப்பதை சவாலாக நினைக்க கூடாது. பலருக்கும் சோதனை என்பது வருகிறது. “தெய்வம் மனுஷ்ய ருபேண” என்ற வாக்கியத்தில் அனைவருமே பகவத் ஸ்வருபமே. பக்தி மார்க்கத்திலிருக்கும் போது சோதனை வருவது கூட கடவுள் நமக்கு கொடுக்கும் சோதனை தான். நாம் அம்பாளை முழுமையாக சரணாகதி செய்வோம். எல்லாமே நமக்கு அனுகூலமாய் அமையும். மேலும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் கூட ஒரு கால கட்டத்தில் சில சோதனைகள் மூலம் நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள்.

தொடர்ந்து கோவிலுக்கு செல்பவர்கள் கூட வேண்டுதல் சில நிறைவேறாவிடில் கோவிலுக்கு போகமாட்டார்கள். இப்படியும் சிலர் உண்டு. ஆக நமக்கு ஒரே குறிக்கோள், நம்பிக்கையுடன் கடவுளை சரணடைவோமாக.

**9. How can I build devotion and surrender myself completely to the Mother Goddess?**

The Goddess is the Mother of the Universe. Through surrender we should offer ourselves to the Goddess. By chanting slokas of the Goddess, serving the Goddess and adopting the quality of steadfastness, we can offer ourselves to the Goddess. If we are completely under the shelter of the Goddess, the thought of being a Universal Mother would automatically develop within us; especially the superior qualities of love, compassion, providing good advice, tolerance, etc. would develop within us. The only way to reach the Goddess is through total surrender.

**நாம் பக்தியை வளர்த்துக்கொண்டு முழுமையாக அம்பாளிடம் எப்படி சரணடைய வேண்டும்?**

சாஷாத் அம்பிகைதான் லோகமாதாவாகிறாள். சரணாகதி மூலம் அம்பாளிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும். அம்பாளை பற்றிய ஸ்தோத்திரங்கள், சேவைகள், வைராக்கியம் இவற்றினால் அம்பாளிடம் நம்மை அர்ப்பணிக்க முடியும். நாம் முழுமையாக அம்பாளால் ஆட்கொண்டு விட்டால் நம் மனதில் ஒரு தாயை போன்ற உயர்ந்ததான எண்ணங்கள் தோன்றும். குறிப்பாக அன்பு, அரவணைப்பு, கருணை, நல்லுபதேச சிந்தனை, சகிப்புத்தன்மை எண்ணற்ற வானளாவிய உயர்ந்த பண்புகள் போன்ற சத்குணங்கள் நிரம்பியிருப்பதை உணரமுடியும். அம்பாளை அடைய ஒரே வழி சரணாகதி மட்டுமே.

## II. Karma / கர்மா

**10. What is Karma and how does it affect us?**

Unlike living creatures, human birth is very rare and precious. Having got this precious life we should always do good things only. By primarily following our Shastra, Purana and Guru, all are actions will become good. Whatever be the actions performed by us in this

birth (in Kali Yuga), we will bear the fruits also in the same birth and the actions will not move to the next birth/janma. The bad actions acquired by us in previous birth will not affect us, if we live righteously in the existing birth. Further we can also realize our karma, based on the saying 'One who commits evil deeds, will definitely be affected by his own actions'.

We all know that "God is present in human form" and if we firmly believe this, we should accept and acquire the characteristics of God. For all our actions, love is the base/foundation. One who showers love to all will be considered as a loving person.

Whatever we do, we will receive the fruits of our action based on the attitude with which we perform the act. In this Kali Yuga, Karma is very important. Human birth is very special and in this birth, we should perform good deeds as much as possible, always render help to all, follow the principle of 'Non-violence' (which is the greatest Dharma) and refrain from performing evil deeds. In the epic Ramayana, difficulties were faced by some throughout the birth due to a curse and in Mahabharata difficulties were faced by many due to sins committed in the previous birth. But all these events happened in the Dwapara Yuga and the same does not apply to Kali Yuga.

In this Kali Yuga, 'Dharma' and 'Karma' our like our two eyes and we should give importance to that and follow the same. The fruits of ones actions will be born in the same birth and this is considered as 'Dharma' in this Kali Yuga. For all our actions performed by us in this Kali Yuga, 'Namasmarana' (chanting the divine name of the Lord) is the greatest and by chanting God's name, our karma will not follow us.

**கர்மா என்றால் என்ன? கர்ம வினை என்றால் என்ன?**

"ஜந்தூனாம் நர ஜன்ம துர்லபம்" என்பதைப்போல் மனிதப்பிறவி கிடைத்தற்கரிய பிறவியாகும். இப்பிறவியில் பொதுவாகவே நல்லறத்தோடு வாழ வேண்டும். சாஸ்திரங்கள், புராணங்கள், குருமார்கள் இவற்றை முன்னோடியாக கொண்டு வாழ்வதால் எவ்வினையும் நல்வினையாகவே அனுபவிக்க முடியும். நாம் எது செய்தாலும் அதற்கு பலன் இந்த ஜென்மாவிலேயே தான். வினை தொடர்கிறது என்ற நினைப்பிலும் கலிகாலத்தில் இறைத் தொண்டு தீராத வினையை தீர்க்கும் என்பதால், வினை தொடராது. மேலும்

முன் ஜென்ம வினை என்று இருப்பின் நர ஜன் மா கிடைக்காது. அப்படி கிடைத்த இந்த ஜென்மா அறத்தோடு வாழ்ந்தால் வினை பற்றாது. நாம் செய்யும் தீவினைக்கு பரிகாரம் இந்த பிறவிலேயே இருப்பதால் இது தொடராது. மேலும் நம் கர்மவினையை அறிந்து கொள்வது என்பது கெடுவான் கேடு நினைப்பான், விநாஸ காலே விபரீத புத்தி என்றபடி இதன் மூலம் புலப்படும். தெய்வம் மனுஷ்ய ரூபேண என்பதுண்டு, அப்படி மனுஷா ரூபத்திலே கடவுள் இருப்பார் என்றால் நாம் கடவுளுடைய குணங்களை ஒத்து இருந்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் அன்புதான் சிறந்த வஸ்துவாகிறது. அன்பை அளிப்பதால் அன்புடையீர் என்ற பெருமையும் கிடைக்கிறது.

நாம் எதை எந்த மனநிலையில் செய்கிறோமோ அந்த மனநிலையை பொறுத்துத்தான் பலன். கர்மா என்பது கலிகாலத்தில் அவசியமானதாகிறது. பிறவி விசேஷமானது. கிடைத்தற்கரியது என்பதால் நல்லதை பண்ண வாய்ப்பு உள்ளதால் கூடிய வரை நன்மை செய்யவும் பிறருக்கு அனுகூலமான எதுவும் நல்லது தான். “அஹிம்ஸா பரமோ தர்ம:” என்பதைப் போல் பிறருக்கு தீங்கு செய்யாததே நல்லறம் ராமாயணத்தில் கூட சாபத்தினால் சில சிரமங்கள் பிறவி முழுதும் தொடர்ந்தது பாரதத்திலும் கூட பலரும் முற்பிறவியின் வினையால் சிரமம் நேர்ந்தது, அதைப் போல் கலியுகத்தில் கூற முடியாது. அது த்வாபரயுகம் அந்த நிலை இதில் காண இயலாது. மேலும் மனித ஜென்ம ஸம்ஸ்காரத்தினால் நிறைவு பெறுகிறது. கர்மா சரணம் தர்மாசரணம் இருகண்கள் தர்மத்தையும் கர்மத்தையும் கடைபிடிப்பது நலம். நாம் பொதுவாக இந்த ஜென்மாவின் ரகஸியத்தை தெரிந்து கொள்ள கலியில் வாழ்ந்த மஹான்களே சான்று பொதுவாய் எது செய்தாலும் அதற்கு பலன் உடனே அனுபவிப்பதுதான் கலிதர்மம். நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்த எல்லாவற்றிற்கும் கலியில் நாம ஜபம் மட்டுமே தகுந்த மருந்தாகயிருப்பதால் கர்மா தொடர்வதில்லை.

### 11.Why do we have to undergo our Karma?

Doing one’s karma or not doing one’s karma is an individual’s wish. Karma is laid down for human beings only. There are many types of Karma. Karma means action. Through Karma, one’s birth can be made purposeful and sacred. One can obtain good benefits throughout one’s life by performing one’s Karma. Performing one’s karma is considered as Dharma. Karma is also those which are performed by the five sense organs. The witness for karma is one’s

own consciousness and; and the witness for one' consciousness is God. By performing one's Karma (good) one can attain benefits manifold, especially the thought of serving others is considered the greatest karma. For every individual, karma (kaaryam) is very important. The karma (good) is beneficial for the world.

**கர்மாவை நாம் ஏன் அனுபவிக்க வேண்டும்?**

கர்மா பண்ணுவதும் பண்ணாததும் அவனவன் தனி விருப்பம். கர்மா என்பது மனிதனுக்கு மட்டுமே விதிக்கப்பட்டது. பலவிதமான கர்மா உள்ளது. கர்மா என்பது கார்யம். கர்மா பல வழிகளுக்கும் பொருந்தும். ஜென்மா எடுத்ததற்கு கர்மாவினால் பவித்ரமாக்கிக் கொள்ளவும் முடியும். ஆயுள் முழுதும் கர்மாவினால் நற் பலன் கிட்டும். கர்மா செய்வது தர்மமாகும். ஐம்புலன்களினால் செய்யப்படுபவையும் கர்மாதான். கர்ம ஸாஷி மனசுதான், மனசாஷி பகவான்தான். கர்மா (நல்லதை) செய்யும்போது பல மடங்கு பலன் உண்டு, முக்கியமாக பரோபகார சிந்தனையே சிறந்த கர்மாவாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் கர்மா (காரியம்) முக்கியமானதாகிறது.

## III. For Ladies / ஸ்திரீகளுக்காக

**12.Can pregnant ladies visit the temple?**

Pregnant ladies visiting the temple and listening to the Pravachanams in the temple, bestow special benefits. If a doctor says that pregnant ladies should not visit a temple, then there could be some reason for that. But if others say this, it may not be appropriate or suitable. Further as per the Shastras mentioned by certain people, pregnant ladies should not climb a hill. One may adhere to this like a precaution, as climbing a hill could cause some discomfort or inconvenience. Even if you have darshan of some Yagnas, there is an opinion/view (which I have heard or read) that pregnant ladies should not be present at the time of Poornahuti. Other than this if somebody strongly/forcefully mentions that pregnant ladies should not visit the temple, it is considered as Adharma. During pregnancy, listening to the advice given by the elders in the family, worshipping God, etc. is considered good. To obtain the grace of the Goddess, one can sincerely pray/worship God at their residence/home itself.

**கர்ப்பிணி பெண்கள் ஆலயத்திற்கு செல்லலாமா?**

காப்பம்தரித்துள்ள ஸ்திரீ ஆலயம் செல்வது அங்கு நடைபெறும் ப்ரவசனங்களை ஸ்ரவணம் செய்வது விஷேச பலன். ஆலயத்திற்குச் செல்லக்கூடாது என்று மருத்துவர் கூறினால் அதற்கு காரணம் இருக்கலாம். ஆனால் மற்றவர்கள் கூறுவது பொருந்தாத விஷயம் ஆகும். மேலும் மலை ஏறுவது மட்டும் கூடாது என்று சிலருடைய சாஸ்த்திரம். மலை ஏறுவதால் சில அசௌகர்யம் ஏற்படலாம் என்று முன்னெச்சரிக்கையுடன் இதை அனுஷ்டிக்கலாம். யாகங்களை தரிசனம் செய்தாலும் பூர்ணாஹுதி சமயத்தில் அங்கு இருக்க கூடாது என்று கேட்டும் படித்தும் இருக்கிறேன்.

மற்றபடி ஆலயம் செல்லக்கூடாது என்று கர்ப்பிணி ஸ்திரீகளை அச்சுறுத்தும்படி கூறுவது கூட அதர்மம் தான். கருத்தரித்த காலங்களில் வீட்டில் உள்ள பெரியோர்களின் அறிவுரை மற்றும் தெய்வ வழிபாடு போன்றவற்றை கடைபிடிப்பது நலம். அம்மன் அனுக்ரஹத்தை பெற வீட்டிலேயே கூட ஆத்மார்த்தமான ப்ரார்த்தனை செய்து கொள்ளலாம்.

**13. Can ladies wear Rudraksha Mala?**

Wearing Rudraksham is good, but when ladies have to wear that there are certain rules or procedures for that. Those who have taken Dheeksha and those who perform Nithya Pooja or Aradhanai can wear Rudraksham and there is no restriction on age. Rudraksham can be worn as a Mala. Without considering the religion or caste, Rudraksham can be worn. Particularly it is best and ideal when it is worn only during the time of performing Pooja or Japam. Definitely one can wear the Rudraksham, but these rules or procedures are very important. If one has taken Shiva Dheeksha, one can always wear the Rudraksham around the neck.

**பெண்கள் ருத்ராக்ஷம் அணியலாமா?**

ருத்ராக்ஷம் அணிவது நன்மைதான். ஆனாலும் பெண்கள் அணிவதில் சிறு சிறு விதிமுறைகள் உண்டு. தீக்ஷைப் பெற்றவர்கள் அணியலாம். நித்ய பூஜை ஆராதனை செய்பவர்கள் அணியலாம். வயது கட்டுப்பாடு கிடையாது. ருத்ராக்ஷ மாலையாக அணியலாம். ஜாதி மதம் பார்க்காமல் அணியலாம். குறிப்பாக பூஜை ஜபம் போன்றவற்றை

கடைபிடிக்கும் போது அணிவது மட்டும் தான் சிறப்பு. கண்டிப்பாய் ருத்ராக்ஷம் அணியலாம், ஆனால் இந்த நியதி மட்டும் முக்கியம். சிவ தீக்ஷை எடுத்துக் கொண்டுவிட்டால் எப்போதும் கழுத்தில் அணிந்து கொண்டு இருக்கலாம்.

**14. What sloka can be chanted by a woman during her pregnancy to prevent negative thoughts and enable positive thinking?**

For purity of mind, to be fearless, to enable positive thinking, to gain prosperity and for events like pregnancy to be smooth and good, you can chant the 'Rama nama', 'Kamakshi Navarathna Mala' and Kanchi Mahaperiyava's sloka "Abhara Karuna Sindum Gnanadham Shantha Roopinam Sri Chandrashekhara Gurum Pranamami Mudhanvaham". When you chant this sloka you will definitely have good thoughts, will remain calm, will be happy without any fear and will gain victory in all your actions.

**கர்ப்பமாக இருக்கு சமயங்களில் மனதில் கெட்ட சிந்தனை இல்லாமல் நல்ல எண்ணங்கள் அடைய என்ன ஸ்லோகம் சொல்ல வேண்டும்?**

மனதூய்மைக்கும், நிர்ப்பயம் இன்றி இருக்கவும், நல்ல சிந்தனை ஏற்படவும் வேண்டி ஸகல சம்பத்துக்களுடன் இருக்க வேண்டியும், ப்ரஸவம் போன்ற வைபவம் சுகமாயிருக்கவும் வேண்டி ராம நாமம், காமாக்ஷி நவரத்னமாலா, காஞ்சி மஹா பெரியவாளின் ஸ்லோகம் "அபார கருணாஸிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம் ஸ்ரீ சந்தர சேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்" இந்த ஸ்லோகத்தை சொன்னால் கண்டிப்பாய் நல்ல சிந்தனை, பரம சாந்தம், ஆனந்தம், பயமற்ற நிலை, கார்ய ஜெயம் அனைத்தும் உண்டு.

## IV. Self Inquiry / ஆத்ம விசாரம்

**15. Vedanta teaches us not to depend on worldly things and to aim for renunciation. However from a practical point of view is this possible?**

Vedanta teaches us many good things. Only when we accept and follow them, do we gain peace of mind. Further it does not state that we should destroy all our desires. What is mentioned is that we need

to reduce our desires. Having desires (to a minimum acceptable level) is considered as Dharma. Living in a manner where others praise or appreciate us is not wrong; but publicizing that would attract evil actions. For a man, having a house, wealth, etc. is required. For showing Bhakthi to God or for performing good deeds, this sort of living would not act as a hindrance. In spirituality, having clarity in mind and purity in heart is most important. What is with you, would give you happiness (or bliss) and the devotion you show to God would give happiness (or bliss) for God. Spirituality is a kind of medicine which would transform us into good humans. It is enough if we have total faith and confidence in spirituality.

**வேதாந்தம் நம்மை லோக விசாரமின்றி நம்மை யார் என்று உணர போதிக்கிறது? இது நடைமுறையில் சாத்தியமா?**

வேதாந்தம் பல நல்ல விஷயங்களை தான் போதிக்கிறது. நாம் முழுமையாக ஏற்று நடக்கும் போது தான் அதில் மன அமைதி கிட்டும். மேலும் ஆசையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லவில்லை, குறைத்துகொள் என்றும், நியாயமான ஆசைகள் தான் தர்மம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. நாம் பலரும் பாராட்டும் விதமாக வாழ்வது தப்பில்லை, ஆனால் விளம்பரம் மட்டும் ஆபத்தை தரும். ஒரு மனிதனுக்கு வீடு, பொருள் எல்லா அந்தஸ்தும் தேவைதான். கடவுளிடம் பக்தி செய்யவோ நல்ல காரியங்கள் செய்யவோ இந்த ஆடம்பர வாழ்க்கை தடையாகாது. ஆன்மீகத்திற்கு மனத்தெளிவும் மன சுத்தமுமே முக்கியம். உங்களிடம் உள்ளது உங்களுக்கு ஆனந்தமே. நீங்கள் கடவுளிடம் பக்தி செய்வது அவருக்கு ஆனந்தம். ஆன்மீகம் என்பது நம்மை நல்வழி படுத்தும் ஒரு மருந்தாகும். அதில் நாம் பூரண நம்பிக்கையை மட்டும் வைத்தால் போதுமானது.

**16. How does one try to realize oneself and attain God in this materialistic world?**

To desire is not wrong, but the thought of attaining the desire (at any cost) is wrong. In our life - Money, Position and Fame becomes necessary and we are unable to render service, beyond these things. Even in spirituality, in some places, Religion, Money, Position and Fame are predominant. However did not Maha Periyava live a 100 years like the water in the lotus leaf?

Love is enough in spirituality. Work is worship. We can see God / realize God, by rendering service to a Guru. Generally in this material world, Money, Position, etc. is important. Still, when it comes to spirituality, we should consider service as the greatest opportunity given by God and try to accomplish the purpose of this birth through Service. Since our mind, thoughts and actions should be pure, it is good to render Service. Total faith is a must for this. Do your Service and God will take care of your needs.

**மேலும் மேலும் பணம் சம்பாதிக்கணும் என்ற இந்த காலகட்டத்தில் நம்மை நாம் எப்படி உணர முடியும்?**

ஆசைபடுவது தவறு அல்ல, அடைய நினைப்பது தவறு. இந்த காலகட்டத்தில் பணம், பதவி, புகழ் எல்லாமே அவசியமானதால் இவற்றை கடந்து சேவை செய்ய முடியவில்லை. ஆன்மீகம் கூட ஒரு சில இடங்களில் பதவி, புகழ், பணம், ஜாதி இவற்றை மட்டும் அனுமதிக்கிறது. மஹாபெரியவா கூட நூறு வயது வரை தாமரை இலை தண்ணீரை போல் இருக்கவில்லையா! ஆன்மீகத்திற்கு அன்பு மட்டுமே போதுமானது. செய்யும் தொழிலே தெய்வம். நாம் கடவுளை குரு சேவையில் காண முடியும், உணர முடியும் பரோபாகாரம் இதம் சரிரம் பொதுவாய் உலக மாயையில் பணம் பதவி அனைத்துமே முக்கியம்தான். இருப்பினும் ஆன்மீகம் என்று வரும்போது நமக்கு கடவுள் கொடுத்த மிக பெரிய வாய்ப்பு எனக்கருதி சேவை மூலம் பிறவி பயனை அடைய முடியும். நம் மனம், எண்ணம், செயல் மூன்றும் பவித்ரமானதாகும். சேவை செய்வது நல்லது அதற்கு முழு நம்பிக்கை மட்டுமே தேவை. உன் சேவையை செய், உன் தேவையை கடவுள் பூர்த்தி செய்வார்.

**17. In this present world of fast life, people continue to crave for material pleasures whereas on the other side we also find truthful human beings who sacrifice their life for the cause of others. How do we look at this situation?**

In general, every human being has many good qualities. But since they have many wants (necessities) in life and they are worried about the future, they tend to save money. To maintain the current level (of living), a comfortable/wealthy life has become a necessity